ROBUST HOTELS LIMITED

CIN: L55101TN2007PLC062085

Registered Office: No. 365, Anna Salai, Teynampet, Chennai – 600 018.

044 6100 1256 info@robusthotels.in www.robusthotels.in

25th August, 2026

To

BSE Limited Phiroze Jeejeebhoy Towers, Dalal Street, Mumbai- 400001	National Stock Exchange of India Ltd. Exchange Plaza, C-1, Block G, Bandra Kurla Complex, Bandra (E), Mumbai-400 051
Type of Security: Equity shares Scrip Code : 543901	Type of Security: Equity shares NSE Symbol : RHL

Dear Sir/Madam,

Subject: Newspaper Advertisement-Notice of 19th Annual General Meeting.

Pursuant to Regulation 30 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, and in compliance with Section 108 of the Companies Act, 2013 read with Rule 20 of the Companies (Management and Administration) Rules, 2014, please find enclosed copies of newspaper advertisements published in the columns of English daily "Business Standard" and Tamil Daily "MakkalKural" on 25th August, 2026. The copies of the same is available on the website of the company https://www.robusthotels.in/agm.php

Kindly take the same on record.

With regards,
For Robust Hotels Limited

YASOTHA BENAZIR N
Digitally signed by YASOTHA BENAZIR N
Date: 2026.08.25 17:07:31 +05'30'

Yasotha Benazir N
Company Secretary & Compliance Officer

HYATT REGENCY CHENNAI

பரந்தூர் விமான நிலையத் திட்டம் கைவிடப்பட்டதற்கு முதல்வரை நேரில் சந்தித்து நன்றி

‘‘காவல் தெய்வம் முதல்வர் விஜய்’’: பரந்தூர் விவசாயிகள் நெகிழ்ச்சி

சென்னை, ஆக. 25–

பரந்தூர் விமானநிலையத் திட்டம் கைவிடப்பட்டது என்ற அறிவிப்பை முதல்வர் விஜய் நேற்று (திங்கள்) சட்டசபையில் அறிவித்ததையொட்டி, அப்பகுதி வாழ் விவசாயிகள், பொதுமக்கள் இன்று (செவ்வாய்) கோட்டையில் முதல்வர் விஜய்யை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார்கள்.

முதல்வருக்கு பொன்னாடை அணிவித்து நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்ட அவர்கள், ‘பரந்தூர் பகுதியைக் காத்து கொடுத்த காவல் தெய்வம் முதல்வர் ஜோசப் விஜய்...’ என்று அவர்கள் நெகிழ்ச்சியோடு கூறினார்கள்.

பின்னர் நிருபர்களிடம் ‘எங்கள் வாழ்வாதாரத்துக்கு விளக்கேற்றி வைத்திருப்பவர் அவர் என்றும் உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார்கள்.

பரந்தூர் விமானநிலையம் வந்தால் எங்களின் வாழ்வாதாரம் பறிபோய்விடும், செம்பரம்பாக்கம் நீர் வரத்து பாதிக்கப்படும். மழை அதிகம் பெய்யும் காலத்தில் வெள்ளம் சென்னை நகரைப் பாதிக்கும் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லி, விமான நிலையம் கூடாது... என்று அன்றைய திமுக ஆட்சியாளர்களிடம் முறையிட்டோம். அதையெல்லாம் அந்நாள் முதல்வரோ, பொறுப்பில் இருந்தவர்களோ செவி மடுக்கவேயில்லை என்று காட்டமாகக் குற்றஞ்சாட்டினார்கள். ஆனால் தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றி இருக்கிறார் முதல்வர் விஜய் என்று குறிப்பிட்டு அவருக்கு நன்றி தெரிவித்தனர்.

முதல்வர் விஜய்யின் நேற்றைய அறிவிப்பைக் கேட்டு எங்கள் பகுதியே மகிழ்ச்சியில் திளைத்தது. மனநிறைவு கொண்டோம். பட்டாசு வெடித்துக் கொண்டாடினோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

6 எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா விவகாரம்

சட்டசபையில் எடப்பாடி பழனிசாமி – கே.ஏ. செங்கோட்டையன் காரசார விவாதம்

சென்னை, ஆக. 25–

6 அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா செய்த விவகாரம் தொடர்பாக சட்டசபையில் இன்று எடப்பாடி பழனிசாமி – அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் இடையே காரசார விவாதம் நடைபெற்றது.

தமிழக சட்டசபையில் இன்று இயற்கை வளங்கள், தொழில்துறை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு துறைகள் மீதான மானிய கோரிக்கை நடைபெற்றது. மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் திமுக எம்.எல்.ஏ. ஆஸ்டின் பேசுகையில், 234 உறுப்பினர்களை உள்ளடக்கிய இந்த சட்டசபையில் தற்போது 227 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர்.

6 தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற உறுப்பினர்கள் ஒரு மாதத்தில் தங்கள் பதவியை ராஜினாமா செய்துள்ளனர். எம்.எல்.ஏ.க்கள் இல்லாத நிலையில் அந்த தொகுதி மக்கள் தங்களது பிரச்சினைகளை யாரிடம் கூறுவர்.

மேலும் தேர்தலில் வெற்றி பெறுவது எவ்வளவு கஷ்டம் என்பது இங்குள்ள அனைவருக்கும் தெரியும்.

தேர்தலில் வெற்றி பெற்று சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு வராமல் ஒரு மாதத்தில் தங்கள் பதிவை ராஜினாமா செய்தார்கள் என்றால், இதைவிட பெரிய ஆதாயம் கிடைக்குமோ? என்ற சந்தேகம் உள்ளது என்று பேசினார்.

அப்போது எழுந்து பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, ராஜினாமா செய்யப்பட்ட 6 தொகுதிகளில் பொறுப்பு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு, அந்த தொகுதி மக்களின் குறைகள் கேட்கவும், தேவைகளை நிவர்த்தி செய்யவும் முதல்வர் நடவடிக்கை எடுத்துள்ளார் என தெரிவித்தார்.

6 தொகுதிகளில் நாங்களே வெற்றி பெறுவோம்

அப்போது குறுக்கிட்ட முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, பொறுப்பு அமைச்சர்கள் மொத்த தொகுதி பிரச்சினைகளையும் அறிந்து கொள்ள முடியாது, எம்.எல்.ஏ.க்கள் தான் அந்த பணியை செய்ய முடியும். சட்டமன்ற உறுப்பினர்கள் தான் மக்கள் பிரச்சனையை கேட்டு தெரிந்து கொண்டு அரசின் கவனத்திற்கு கொண்டு வரமுடியும் என்பதால்தான் சட்டமன்ற உறுப்பினர் தேவை என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் செங்கோட்டையன், 6 சட்டமன்ற தொகுதிகளில் விரைவாக தேர்தல் நடத்த வேண்டும் என்பதுதான் எங்கள் ஆர்வம்; அதில் மாற்று கருத்து கிடையாது; அதில் நாங்கள்தான் வெற்றி பெறுவோம் என்பதிலும் மாற்று கருத்து கிடையாது என்று தெரிவித்தார்.

குதிரை பேரம் இல்லையா?

தொடர்ந்து அமைச்சர் செங்கோட்டையன் பேசுகையில், எடப்பாடி தொகுதியில் தவெக வேட்பாளர் வாபஸ் பெற்றது குதிரை பேரம் இல்லையா? என தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த எடப்பாடி பழனிசாமி, அவரது மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அவர் வாபஸ் பெறவில்லை என்றார்.

அமைச்சர் செங்கோட்டையனின் இந்த பேச்சுக்கு முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட அண்ணா தி.மு.க.வினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மேலும் எடப்பாடி பழனிசாமி பேசுகையில் சில சம்பவங்களை கூறினார்.

அப்போது குறுக்கிட்ட சபாநாயகர், எடப்பாடி பழனிசாமி சொன்னதெல்லாம் வழக்கில் இருக்கிறது. அதைப் பற்றி பேசக் கூடாது. அதனால் அந்த கருத்துக்களை அவைகுறிப்பில் இருந்து நீக்குகிறேன் என்றார்.

தொடர்ந்து பேசிய எடப்பாடி பழனிசாமி ஒரு கட்சியில் இருந்து வெற்றி பெற்றுவிட்டு ராஜினாமா செய்துவிட்டு, மேல் மாடிக்கு சென்று ஏன் வேறு ஒரு கட்சியில் சேர வேண்டுமா? என கேள்வி எழுப்பினார்.

அதிமுக உறுப்பினர்கள் கூச்சல்

அப்போது அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் எழுந்து ஒரு கருத்தை பதிவு செய்ய முயன்றார். அவர் பேசுவதற்கு சபாநாயகர் அனுமதி வழங்கினார். இதனால் எடப்பாடி பழனிசாமி மைக் அணைக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று கூச்சலிட்டனர். இதனால் அவையில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

சபாநாயகர் எழுந்து நின்று இது என்ன பொதுக்கூட்டமா? இங்கு என்ன பொதுக்கூட்டமா நடத்துகிறோம்? ஒருவர் பேசும் போது மற்றவர்கள் எழுந்து நின்று பேச வேண்டுமா? என கோபமாக பேசினார்.

பேச அனுமதிக்கவில்லை என்றால் நிற்கத்தான் செய்வோம் என எடப்பாடி பழனிசாமி ஆவேசமாக பேசினார்.

அதைத் தொடர்ந்து சபாநாயகர் பேசுகையில், முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி உணர்ச்சிவசப்படாமல் பேச வேண்டும். உங்கள் உடலை வருத்திக்கொள்ளக்கூடாது என்று சொல்கிறேன். மேலும் இந்த பிரச்சனையை இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது. உறுப்பினர் ஆஸ்டின் மானிய கோரிக்கை மீது மட்டும் பேச வேண்டும் என்று கூறினார்.

இவ்வாறு சட்டசபையில் காரசார விவாதம் நடந்தது.

மேட்டூர் அணை திறப்பு; விரைவில் நல்ல செய்தி வரும்: அமைச்சர் ஆனந்த்

சென்னை, ஆக. 25–

மேட்டூர் அணை திறப்பு தொடர்பாக கூடிய விரைவில் நல்ல செய்தி வரும் என நீர்வளத்துறை அமைச்சர் ஆனந்த் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் இன்று கவன ஈர்ப்பு தீர்மானத்தில் பேசிய திமுக சட்டமன்ற உறுப்பினர் கோவி செழியன், டெல்டா மாவட்ட விவசாயிகள் எப்போது மேட்டூர் அணையில் தண்ணீர் திறக்கப்படும் என காத்திருக்கிறார்கள். மேட்டூர் அணை எப்போது திறக்கப்படும் என அரசு அறிவிக்குமா? என கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து பேசிய எடப்பாடி பழனிசாமி, மேட்டூர் அணை நீர் திறப்பு தொடர்பாக ஏற்கனவே கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்துள்ளோம். குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. நீர் இல்லாத காரணத்தினால் திறக்கப்படவில்லை என நேற்றைய தினம் நீர்வளத்துறை அமைச்சர் கூறியிருந்தார். ஆனால் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. டெல்டா மாவட்ட விவசாயிகள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு வாழ்வாதாரமே விவசாயம் தான். இந்த ஆண்டு சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படுமா? அப்படி திறப்பதாக இருந்தால் எப்போது திறக்கப்படும்? 15 நாட்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட வேண்டும். அப்போது தான் விவசாயிகள் அதற்கான பணிகளை துவங்குவார்கள் என்றார்.

இதற்கு பதில் அளித்த நீர்வளத்துறை அமைச்சர் ஆனந்த், மேட்டூர் அணை திறப்பு குறித்து விரைவில் நல்ல செய்தி அறிவிக்கப்படும் என்று கூறினார்.

கர்நாடகாவில் 3 தமிழர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்ட விவகாரம்: சட்டசபையில் உதயநிதி ஸ்டாலின் கவன ஈர்ப்பு

சென்னை, ஆக. 25–

கர்நாடகாவில் 3 தமிழர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்ட விவகாரம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சட்டசபையில் இன்று கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்.

சட்டப்பேரவை இன்று காலை கூடியதும், எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் கர்நாடக எல்லையில் தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பாக கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து பேசியதாவது:

கடந்த 15 ஆம் தேதி அதிகாலை கர்நாடக வனத்துறையால் 3 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவ்விவகாரம் ஏற்கனவே இந்த அவையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. 3 தமிழர்களின் உடற்கூறாய்வு பரிசோதனை அறிக்கை இன்று வெளிவந்துள்ளது. அதில், 3 பேரும் சித்தரவதை செய்யப்பட்டு மிக அருகாமையில் நிற்க வைத்து சுட்டுக்கொல்லப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

3 பேருக்கும் மிக படுகாயம் ஏற்பட்டிருந்ததாகவும், விலா எலும்பு முறிக்கப்பட்டிருந்ததாகவும் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இது முழுக்க முழுக்க படுகொலை. இதன் மீது தமிழ்நாடு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? குறைந்தபட்சம் அந்த மாநில அரசிடம் விளக்கம் கேட்டு கடிதம் எழுதியுள்ளதா? கடந்த வாரம் நடைபெற்ற தென் மண்டல முதலமைச்சர்கள் மாநாட்டில் கர்நாடக முதலமைச்சரிடம் தமிழ்நாடு அரசு நேரடியாக கண்டனம் தெரிவித்துள்ளதா?

கர்நாடக மாநில காவல்துறைக்கு பதிலாக ஒரு மேலிட விசாரணை நடத்த தமிழக அரசு வலியுறுத்த வேண்டும் என கூறியிருந்தோம். அது தொடர்பாக கர்நாடக முதலமைச்சரிடம் பேசப்பட்டதா? இந்த விவாகரம் நடந்த உடனே முதலமைச்சரோ அல்லது அமைச்சரோ அந்த குடும்பத்தினருக்கு ஆறுதல் சொல்லியிருக்க வேண்டும். 3 தமிழர்களின் குடும்பத்திற்கு தேவையான நிதி உதவியும், சட்ட உதவியும் அரசு செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

அதற்கு சபாநாயகர், வனத்துறை, சட்டத்துறை அமைச்சர்கள் ஏற்கனவே பதில் சொல்லிவிட்டனர். பிரதே பரிசோதனை அறிக்கை குறித்த கேள்விகளுக்கு பதில் கிடைத்தவுடன் அளிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

ஏழை எளிய மக்களுக்கு கொடை உள்ளத்தோடு உதவிய விஜயகாந்த் புகழ் தழைத்தோங்கட்டும்

முதல்வர் விஜய் புகழாரம்

சென்னை, ஆக. 25–

தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவனத் தலைவர் விஜயகாந்தின் பிறந்தநாளை முன்னிட்டு முதலமைச்சர் ஜோசப் விஜய் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:–

மனிதநேயம், துணிச்சல், தன்னலமற்ற சேவை ஆகியவற்றை அடையாளமாகக் கொண்ட தமிழ்நாடு சட்டமன்ற முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவனத் தலைவர் கேப்டன் விஜயகாந்த்தின் பிறந்தநாளில் அவருக்கு எனது புகழ் வணக்கங்களைச் செலுத்துகிறேன்.

திரைத்துறையில் தனக்கெனத் தனி முத்திரை பதித்ததோடு, அரசியலில் மக்கள் நலனை முன்னிறுத்திய தலைவராகவும் திகழ்ந்து, ஏழை, எளிய மக்களின் மீது அன்பும், அக்கறையும் கொண்டு கொடையுள்ளத்தோடு உதவிய புரட்சிக் கலைஞரின் புகழ் என்றும் நிலைத்தோங்கட்டும்!

இவ்வாறு முதலமைச்சர் விஜய் கூறியுள்ளார்.

தமிழகத்துக்கு 9 ஆயிரம் கன அடி நீர் திறக்க வேண்டும்: கர்நாடகாவுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவு

புதுடெல்லி, ஆக. 25–

தமிழகத்துக்கு 9 ஆயிரம் கன அடி நீர் திறக்க வேண்டும் என்று கர்நாடகாவுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் இன்று உத்தரவிட்டள்ளது.

காவிரி நதிநீரை கர்நாடகம், தமிழ்நாடு புதுச்சேரி மற்றும் கேரளா ஆகிய 4 மாநிலங்களும் பிரச்சினை இன்றி பகிர்ந்து கொள்வதற்காக சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின் பேரில் காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி ஒழுங்காற்று குழு கடந்த 2018ம் ஆண்டு அமைக்கப்பட்டது. அப்போதிலிருந்து தற்போது வரை இந்த இரு அமைப்புகளும் அவ்வப்போது கூடி நதிநீர் பிரச்சினைகளை தீர்த்து வருகின்றன.

இந்த வகையில் மேலாண்மை ஆணையம் 52 முறை கூட்டப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக 54வது கூட்டம் இன்று டெல்லியில் நடைபெற உள்ளது. ஆணைய தலைவர் எஸ்.கே.ஹல்தார் தலைமையில் டெல்லியில் நடைபெறும் இந்த கூட்டத்தில் பங்கேற்க 4 மாநிலங்களின் அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் 4 மாநில அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

காலை 11 மணிக்கு கூட்டம் தொடங்கியது.

அப்போது கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறப்பது குறித்து தமிழகத்தை சேர்ந்த அதிகாரிகள் காவிரி மேலாண்மை ஆணையத்திடம் வலியுறுத்தினர். தொடர்ந்து, தண்ணீர் இருப்பு மற்றும் திறக்கப்படும் தண்ணீரின் அளவு குறித்து கர்நாடக அதிகாரிகள் ஆணையத்திடம் தெரிவித்தனர்.

இதனையடுத்து, தமிழகத்துக்கு காவிரியில் அடுத்த 15 நாட்களுக்கு தண்ணீர் திறக்க கர்நாடகாவுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

காவிரி ஒழுங்காற்று வாரியத்தின் பரிந்துரைப்படி, வினாடிக்கு 9 ஆயிரம் கன அடி வீதம் அடுத்த 15 நாட்களுக்கு காவிரியில் திறந்து விட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

‘‘மீலாது நபி’’: எடப்பாடி வாழ்த்து

சென்னை, ஆக.25–

நாளை (26–ந் தேதி) ‘‘மீலாது நபி’’. இதை முன்னிட்டு அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள வாழ்த்து கூறியுள்ளார்.

இதையொட்டி அவர் வெளியிட்டுள்ள ஒரு செய்தியில் கூறியிருப்பதாவது:–

அண்ணல் நபிகள் நாயகம் பிறந்த நன்நாளை உலகம் முழுவதும் வாழும் இஸ்லாமியப் பெருமக்கள் ‘‘மீலாது நபி’’ என மகிழ்ச்சியுடன் கொண்டாடும் இந்த இனிய வேளையில், இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

உண்மையைப் பேசுதல்; தூய எண்ணத்தோடு வாழ்தல்; ஏழை, எளியோருக்கு உதவிபுரிதல்; அனைவரிடத்திலும் அன்புடனும், நற்பண்புடனும் பழகுதல்; புகழையும், அறத்தையும் தராத செயல்களை செய்யாதிருத்தல் என்பது, இறைத் தூதர் நபிகள் நாயகம் உலகிற்கு நல்கிய போதனைகளாகும்.

அண்ணல் நபிகள் நாயகத்தின் பிறந்த நாளன்று, அவரது போதனைப்படி அன்பு பெருகவும்; அமைதி தவழவும்; சமரசம் உலவவும்; சகோதரத்துவம் தழைக்கவும் அயராது உழைத்திட உறுதி ஏற்போம் எனக் கூறி, இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது இனிய ‘‘மீலாது நபி’’ நல்வாழ்த்துகளை அன்போடு உரித்தாக்கிக்கொள்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

Page Industries: Time to stretch volume fit

Rich valuations and margin pressure put onus on volume growth

RAM PRASAD SAHU
Mumbai, 24 August

The stock of Page Industries, the Indian licensee for Jockey and Speedo, has slipped more than 19 per cent to ₹35,475 from its recent highs in July. Concerns over continued margin compression, a weak first quarter (April-June/Q1) of 2026-27 (FY27), and premium valuations have weighed on the stock and its near-term outlook.

Though Q1 growth was below expectations, the management has stuck to its guidance of double-digit volume growth for FY27. Brokerages have divergent views on the company's outlook. While some believe margin gains will be difficult in a high-inflation environment, others remain positive on the stock, given the growth guidance. At the current price, the stock is trading at 40-45x its estimated earnings per share for 2027-28.

Page's top line growth moderated to 8 per cent year-on-year (Y-o-Y) in Q1, compared with 14 per cent in the fourth quarter (January-March/Q4) of 2025-26. This was supported by volume growth of 5.7 per cent Y-o-Y to 61.9 million pieces. Revenue growth was lower than estimates and was affected by temporary logistics and manpower issues. Constraints towards the end of the quarter led to three days' revenue being deferred to the third quarter (July-September/Q3). A change in the auto-replenishment system (ARS), which enabled growth to be spread more evenly throughout the year rather than being concentrated in Q1, also affected growth.

Though volume growth was below 6 per cent in Q1, the company has maintained its double-digit volume growth target for FY27. It expects realisations to improve on the back of premiumisation and the partial benefit of the price hike.

Losing grip



Source: Bloomberg, BSE

Premiumisation, according to Emkay Research, remains a key growth lever, with product upgrades and greater newness in the athleisure segment, including JKY Groove and Studio. Athleisure is a key focus area and is being backed by the highest marketing investments across its portfolio.

Page is well positioned to transition towards a mid-teen growth phase, supported by the alignment of "demand-side" tailwinds, such as market consolidation, with "supply-side" initiatives, including distribution expansion, consumer activations, premium products such as Groove, Studio, and Bonded Tech, and the removal of the ARS impact, say analysts led by Devanshu Bansal of the brokerage. The recent price correction and double-digit growth guidance should drive a rerating, they add. The brokerage has an "add" rating on the stock with a target price of ₹46,800.

Margin performance was also affected. Gross margin slipped 189 basis points (bps) Y-o-Y to 57.2 per cent on account of higher cotton costs and the increased cost of petroleum-based synthetic fabric in April and May. The company absorbed the rise in raw material costs through cost initiatives in sourcing, productivity, and supply chain. While it took a 2 per cent price increase in May, this was not sufficient to offset the higher costs, with the benefit expected to accrue in Q2.

ICICI Securities points out that the management absorbed part of the raw material inflation rather than passing it through fully, indicating continued sensitivity around pricing. The brokerage has a "reduce" rating on the stock with a target price of ₹31,500. While the company is pushing new product lines, such as JKY Groove, and expanding its footprint, the need to absorb commodity shocks confirms its thesis that pricing elasticity is structurally constrained, say analysts led by Ashutosh Joytiraditya of the brokerage. The stock's premium valuation makes it vulnerable to these headwinds, they add.

The drop in gross margin, along with operational deleverage and inflationary pressure on employee and logistics costs, led to a 204-bp decline in operating profit margin. Equirus Securities believes that if raw material prices remain elevated, Page may need to take another round of price hikes. The brokerage expects the company to register a gross margin decline of 126 bps and a 114-bp decline at the operating level in FY27. While the management indicated double-digit volume growth in the quarters to come, Equirus does not bake in the same, point out analysts led by Deep Shah of the brokerage.

YOUR MONEY

Why term cover is a must for those with edu loans

KARTHIK JEROME

Thousands of Indian students now take education loans to fund their studies. If the loan is not backed by term insurance, the burden can fall on the parents if the student passes away early. Policybazaar has announced the launch of dedicated student term plans in partnership with ICICI Prudential Life and Axis Max Life, offering higher-value covers.

Who can get the cover

The offering is available to students pursuing graduation or post-graduation. "Eligible students can obtain life insurance coverage of up to ₹2 crore," says Vaibhav Kumar, head — products, ecommerce and enterprise Centre of Excellence (CoE), Axis Max Life Insurance.

Financial waivers allow students to obtain cover without submitting proof of income. "Eligibility for financial waiver depends on the college and the degree being pursued," says Varun Agarwal, head of term insurance, Policybazaar.

"Eligible students can access term insurance by using their parents' income as proof of financial capacity," says Srinivas Balasubramanian, chief of marketing, digital & bancassurance, ICICI Prudential Life Insurance Company.

Education loan-linked group insurance is another option that can safeguard the family's interests. "Group insurance linked to an education loan can be economical," says Shilpa Arora, cofounder & chief operating officer, Insurance Samadhan.

Why buy early

Term insurance can protect parents against financial liabilities if a student dies young. "It can create a financial safety net for parents and family members," says Balasubramanian.

At a young age, premiums are attractive. "Buying early allows the policyholder to lock in the premium, producing substantial savings over the policyholder's lifetime," says Agarwal.

The term cover should be sufficient to pay the education loan. "It should also leave the loved ones with a financial cushion for lifestyle and long-term needs," says Sarvesh Kumar Mishra, chief third-party distribution officer, Generali Central Life Insurance.

Some suggest buying the maximum sum assured and tenure offered. "Maximising cover early helps lock in higher protection," says Kumar. The cover should ideally last until somewhere between the ages of 60 and 70.

Compare premiums. For a 19-year-old student from Delhi, who is a non-smoker, the annual premium is ₹5,262 to ₹5,266 for a life cover of ₹50 lakh (40-year tenure) offered by ICICI Pru Life and Axis Max Life.

Buy suitable riders. A critical illness rider pays a lump-sum amount if the insured is diagnosed with a specified illness. "The payout can serve as a form of income replacement," says Agarwal.

Waiver-of-premium is another desirable rider. "It can take care of future premiums after a specified disability," says Agarwal. An accidental death and disability rider can also enhance the base cover.

Plan before going abroad

Buying while in India eases underwriting. "Underwriting is simpler while the student is still a resident in India," says Mishra. Most Indian term insurance policies provide global coverage.

Plan for regular payment of premium. "An Indian account with a standing instruction can help prevent the policy from lapsing after the move," says Mishra.

Be transparent with disclosures

Disclose illnesses that run in the family, previous injuries, hospitalisations and surgeries. Asthma, high blood pressure or high cholesterol should also be disclosed, as should alcohol consumption and smoking.

Arora says the country to which the student will travel should be declared. "The loan amount should be mentioned because it explains the cover being sought," says Mishra. Participation in any adventure sport should be declared.

Name the right nominee

The co-applicant should be made the nominee. "The loan liability would come to the co-applicant who gave the guarantee," says Arora. The co-applicant is usually a parent. If both parents are co-applicants, the share of each should be specified.

A married policyholder can allocate different percentages of the benefit among dependants.

Pre-purchase checks

- Long-term claim settlement ratio
- Claim value paid, not just number of claims settled
- Premiums across insurers, especially those with comparable claims records
- Complaint ratio and solvency ratio
- Free health check-ups and wellness benefits
- Additional underwriting requirements, if any, after status changes to NRI
- Possible premium loading or policy-term changes after relocation abroad

EPF vs equities: 6 things to know before choosing your retirement mix

The Employees' Provident Fund (EPF) and stock market investments serve different purposes in a retirement portfolio.

The Employees' Provident Fund Organisation (EPFO) has highlighted six key differences between the two. It has underlined the role of EPF as a retirement savings tool.

1. Regular contributions: EPF contributions are linked to employment, and are made regularly through payroll. Equity investments are voluntary.

2. Employer contribution: EPF receives contributions from the employee and the employer. Market investments are funded by the investor.

3. Stability: EPF interest is declared for each financial year. Equity returns fluctuate with market conditions and are not guaranteed.

4. Tax and social security: EPF comes with favourable tax treatment. Eligible members can get pension benefits under the Employees' Pension Scheme. Equity investments do not offer these benefits, while applicable capital gains may be taxable.

5. Risk: EPF is designed to provide a stable retirement corpus. Equities can deliver higher long-term growth but carry market risk.

6. Purpose: EPF focuses on retirement security and disciplined savings, while equities are a wealth-creation avenue.

The two need not be alternatives. EPF can provide stability, while equity exposure can add long-term growth potential.

Read full report here: mybs.in/2g8Ymxd

COMPILED BY AMIT KUMAR